# முன்பிள்ளைப் பருவ விருத்தி டிப்ளோமா கற்கைநெறி
## 2024/2025
## தேசிய கல்வி நிறுவகம்

தேசிய கல்வி நிறுவக, முன்பிள்ளைப் பருவ விருத்தி டிப்ளோமா கற்கை நெறிக்கான (SLQF - Level 3) விண்ணப்ப ங்கள் கோரப்படுகின்றன. முன்பிள்ளைப் பருவ விருத்தி தொடர்பாகக் கற்க ஆர்வ முள்ளோரும் பொருத்தமான தகைமைகளைக் கொண்டோரும் இக்கற்கைநெறிக்கு விண்ணப்பிக்க முடியும்.

**தகைமைகள்**

விண்ணப்பதாரி இலங்கைப் பிரஜையாக இருத்தல் வேண்டும்.
நன்னடத்தையும் நல்லாரோக்கியமும் உடையவராக இருத்தல் வேண்டும்.
**30.10.2024** அன்று **45** வயதுக்குக் குறைந்தவராக இருத்தல் வேண்டும்

**கல்வித் தகைமைகள்**

க.பொ.த. உயர் தரத்தில் மூன்று (3) பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

**ஆட்சேர்ப்பு முறை**

நேர்முகப் பரீட்சையொன்றின் மூலம் தெரிவு செய்யப்படுவர்.

**கற்கை நெறியின் தன்மை**

ஒரு வருட கற்கை நெறியாகும்.

**பதிவுக் கட்டணமும் கற்கை நெறிக்கட்டணமும்**

பதிவுக்கட்டணம் 1000 ரூபாய் ஆகும். கற்கை நெறிக்கட்டணம் 40,000 ரூபாய் ஆகும். கற்கை நெறிக் கட்டணத்தை மூன்று தவணைகளில் செலுத்த முடியும்.

வார நாட்களிலும் வார இறுதி நாட்களிலும் விரிவுரைகளும் செயற்பாடுகளும் நடைபெறும். அத்துடன் இக்கற்கை ஒப்படைகள், செயன்முறைக் கற்பித்தற் பயிற்சி ஆகியவற்றை உள்ளடக்கியதாகும்.

இக்கற்கை நெறிக்காக வரையறைக்குட்பட்ட தொகையினர் மாத்திரமே சேர்த்துக் கொள்ளப்படுவர். மேற்படி தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரிகள் **2024.10.30** ஆந் திகதிக்கு முன்னர் தேசிய கல்வி நிறுவக பரீட்சைகள் துறையின் உத்தியோகபூர்வ வலைத்தளத்திற்குள் பிரவேசித்து, https://www.exams.nie.lk/intakes/new வழியே நிகழ் நிலையில் (online) மாத்திரம் விண்ணப்பத்தைச் சமர்ப்பித்தல் வேண்டும். நிகழ்நிலையில் விண்ணப்பித்தல் தொடர்பாகத் தேவைப்படும் அறிவுறுத்தல்களைப் பின்வரும் இணைப்பின் வழியே பெறலாம். https://www.exams.nie.lk/info/applying-for-new-enrollments

**பேராசிரியர் பிரசாத் சேதுங்க**
பணிப்பாளர் நாயகம்
தேசிய கல்வி நிறுவகம்
www.nie.ac.lk